<u>IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM</u>

O.S.NO. 03/2009

| | | |
|---|---|---|
| Deposition of Witness | : | PW-1 |
| Name | : | செல்வராஜ் |
| Father's Name /W/o | : | அருணாசலம் |
| Religion | : | இந்து |
| Caste | : | - |
| Calling | : | கூலி |
| Address | : | பனப்பாக்கம் கிராமம், நெமிலி வட்டம். |

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 28.06.2022.

குறுக்கு விசாரணை

இந்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 84 சென்ட் எனக்கு வரவேண்டியது என்று கேட்டு தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கு சொத்து எங்கு உள்ளது என்றால் பள்ளூரில் உள்ளது. வழக்கு சொத்தின் சர்வே எண் என்னவென்றால் சர்வே எண்.116 ஆகும். இந்த சர்வே எண்ணில் மொத்தம் விஸ்தீரணம் 2 ஏக்கர் 76 சென்ட் ஆகும். 2 ஏக்கர் 76 சென்டில் நான் 84 செட்டிற்கு தான் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் மீதி என்ன ஆனது என்றால் என் தந்தை அருணாசலம், முதல் வாதி நடராஜனும் விற்பனை செய்துவிட்டார்கள். அவர்கள் இருவர் சேர்ந்து எவ்வளவு சொத்தை யாருக்கு விற்பனை செய்தார்கள் என்றால் 33 சென்ட்யை தந்தோணி நாயக்கருக்கு விற்பனை செய்தார்கள், வள்ளியம்மாளுக்கு 1 ஏக்கர் 28 சென்ட் விற்பனை செய்தார்கள். 13 சென்டை என் சித்தபா நடராஜன் வைத்துக்கொண்டார். என்னுடைய வாதுரையில் சர்வே எண்.116/1-ல் மொத்தம் 2 ஏக்கர் 45 சென்ட்

என்று சொல்லியுள்ளேன் என்றால் ஞாபகமில்லை. 2 ஏக்கர் 45 சென்ட்டில் என் வாதுரை படி 1 ஏக்கர் 61 சென்டை வள்ளியம்மாளுக்கு விற்பனை செய்துள்ளேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் 1 ஏக்கர் 28 சென்ட்டை தான் வள்ளியம்மாள் பெயரில் பத்திர பதிவு செய்தார்கள். வாதுரையில் சொல்லியுள்ளவை தவறா என்றால் எனக்கு ஞாபகமில்லை. தற்போது நான் எங்கு உள்ளேன் பனபாக்கத்தில் உள்ளேன். நான் சென்று 40 ஆண்களாகிறது. 84 சென்ட்டிற்கு செக்குபந்தி தெரியுமா என்றால் வடக்கு பக்கம் ஏரி கால்வாய் உள்ளது, தெற்கு பக்கம் குள்ளப்ப நாயக்கர் நிலம், கிழக்கில் ஏகாம்பர நாயக்கர் நிலம் உள்ளது, மேற்கு பக்கம் அருணாசலம் நிலம். இவை அனைத்தும் அன்றைய தேதியில் உள்ள செக்குபந்தி நிலம் தற்போது யார் பெயரில் மாறி உள்ளது என்று எனக்கு தெரியாது. வள்ளியம்மாளுக்கு விற்பனை செய்து எத்தனை ஆண்டுகள் ஆகிறது என்றால் 1971-லும், 1975-லும் கொடுக்கப்பட்டது. 84 சென்ட் என் அனுபவித்தில் உள்ளது என்பதற்கு பட்டா தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது போல் எதுவும் பட்டா தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.116/1-ல் 1.61 சென்டு போக மீதி நிலத்தில் 2-ம் பிரதிவாதி 1978-ல் மொட்டை நாயக்கர் என்பவரிடமிருந்து 38 சென்ட்டை கிரையம் வாங்கி அனுபவித்து வந்தார் என்றால் ஆம். (சாட்சி தற்போது மூன்று கை மாறியுள்ளதால் தற்போது எனக்கு தெரியாது என்கிறார்) சர்வே எண்.116/1-ல் 20 சென்ட் இடத்தை நடராஜ பிள்ளை என்பவரிடமிருந்து வாச்சாவாக ராமசாமி என்பவர் வாங்கினார் என்றால் இல்லை தவறு. ராமசாமி என்பவரிடமிருந்து 2-ம் பிரதிவாதி தந்தை நரசிம்ம நாயக்கர் அந்த வாச்சாவை வாங்கினார் என்றால் இல்லை. அவர் தந்தை இறந்த பிறகு 2-ம் பிரதிவாதி தான் அந்த சொத்தை அனுபவித்து வருகிறார் என்றால் இல்லை. 2-ம் பிரதிவாதி துளசிநாதன் மொத்த இடத்தை வள்ளியம்மாளுக்கு விற்பனை செய்தார் என்றால் பொய்யானதாகும். நடராஜ பிள்ளை என்பவர் 1971-ல் வள்ளியம்மாளுக்கு வாய்மொழியாக வாச்சாவை கொடுத்தார் என்றால் இல்லை தவறு. சர்வே

எண்.116/1 மொத்தம் 2 ஏக்கர் 45 செண்ட் இடத்திற்கு முதல் பிரதிவாதி வள்ளியம்மாள் தான் பட்டா பெற்று அனுபவித்து வருகிறார் என்றால் தவறானது. நான் தாவா கிராமத்தில் இருந்து 40 வருடங்களுக்கு முன்பே சென்றுவிட்டதால் எனக்கு உண்மை நிலை தெரியவில்லை என்றால் சரியல்ல. நான் பனபாக்கத்திலிருந்து ஆள் கூட்டு சென்று வேலை செய்து விட்டு வந்தேன். தாவா சொத்து நான் அனுபவித்ததே கிடையாது என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு என்கும் சம்மந்தமில்லை என்றாலும் தாவா தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.